மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கோவில்பட்டி.
முன்னிலை—திரு.C.கருப்பசாமி, B.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி
2026 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 4 ஆம் நாள், வியாழக்கிழமை,
அசல் வழக்கு எண்.170/2019
[CNR No:TNTT06- 000211-2019]
-----

துரைராஜ் ...வாதி

/எதிர்/

1) தமிழக அரசுக்காக,
தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் மூலம்
2) வட்டாட்சியர், கயத்தார்
3) முருகேசன்
4) ஜெயக்குமார் ...பிரதிவாதிகள்
(இ.ம.எண்.383/2022 மனு 10.08.2022 ம் தேதி
அனுமதிக்கப்பட்டதன் பேரில் 4 ம்பிரதிவாதி
இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கப்பட்டு
பிராது சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ளது.)

இவ்வழக்கு 15.04.2026 அன்று என்முன்பு இறுதி விசாரணைக்கு வரப்பெற்று வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.காளிராஜ் அவர்கள் ஆஜராகியும், 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.M.இராமச்சந்திரன் அவர்கள் ஆஜராகியும், 3 ம்பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.கதிர்வேல் அவர்கள் ஆஜராகியும், 4 ம்பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திருமதி.S.மாரீஸ்வரி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், சாட்சிய சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இவ்வழக்கில் இந்நீதிமன்றம் வழங்கும்,

## <u>தீர்ப்புரை</u>

**1)** இறந்துபோன சிவநாராயணசாமி ரெட்டியாருக்கு வாதியும், 3 ம்பிரதிவாதியும் சட்டப்படியான வாரிசுகள் என விளம்புகை பரிகாரம் கோரியும், இறந்துபோன சிவநாராயணசாமி ரெட்டியாருக்கு வாதியும், 3 ம்பிரதிவாதியும் சட்டப்படியான வாரிசுகள் என கண்டு வாரிசு சான்று வழங்க 2 ம்பிரதிவாதிக்கு

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY
Date: 2026.06.04 14:41:55 +0530

ஒரு செயலுறுத்துக்கட்டளை பிறப்பிக்க கோரியும், மற்றும் வழக்கின் செலவுத்தொகை கேட்டும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2)** 4ம்பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்கோரிக்கையில் இறந்துபோன சிவநாராயணசாமி ரெட்டியாருக்கு வாதி, 3, 4 பிரதிவாதிகள் மற்றும் லலித்மோகன் ஆகியோர்கள் வாரிசுகள் என விளம்புகை பரிகாரம் கோரி எதிர்கோரிக்கை வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

**3) வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம்–**

சிவநாராயணசாமிரெட்டியாரின் மூத்த தார மனைவி சீதாலட்சுமியின் மகன் வாதி ஆவார். சிவநாராயணசாமிரெட்டியார் கடந்த 15.10.2002 லும், சீதாலட்சுமி அம்மாள் கடந்த 27.04.1995 லும் காலம் சென்றுவிட்டார்கள். சிவநாராயணசாமி ரெட்டியார் தனது முதல் மனைவி உயிருடன் இருந்த காலத்திலேயே ராஜாத்தியம்மாள் என்பவரை சேர்த்து வைத்துக்கொண்டு, இல்வாழ்க்கையின் பயனாக 3ம்பிரதிவாதி பிறந்தார். மேற்படி ராஜாத்தியம்மாள் கடந்த 29.09.2002 ல் காலம் சென்றுவிட்டார். சிவநாராயணசாமி ரெட்டியாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களுக்கு அவர் பெயரில் வருவாய்த்துறை ஆவணங்கள் ஏற்பட்டு ஆண்டு அனுபவம் செய்து வந்து, இறந்த பின்னர் வாதியும், 3ம்பிரதிவாதியும் வாரிசுகள் நிலைமையில் அடைந்து அனுபவம் செய்து வருகிறார்கள். இறந்துபோன சிவநாராயணசாமி ரெட்டியாருக்கு வாதி மற்றும் 3ம்பிரதிவாதி வாரிசுகள் என்று வாரிசு சான்று கோரி 2ம்பிரதிவாதி அலுவலகத்தில் 07.08.2019ம் தேதி மனு தாக்கல் செய்ததில், இறந்துபோன சிவநாராயணசாமி ரெட்டியாருக்கு 2 மனைவி இருப்பதாக கூறி 14.09.2019ம் தேதி நிராகரிக்கப்பட்டது. அசல் வழக்கு நிலுவையில் இருக்கும்போது வாதியின் சகோதரியான செல்வதுரைச்சியம்மாளின் மகனான 4ம்பிரதிவாதி, இறந்துபோன சிவநாராயணசாமி ரெட்டியாருக்கு வாரிசு என கூறி மனு தாக்கல் செய்து, அனுமதிக்கப்பட்டு வழக்கில் கட்சி சேர்க்கப்பட்டும், 1ம்பிரதிவாதியின் கீழ்

KARUPPASAMY
Digitally signed by KARUPPASAMY
Date: 2026.06.04 14:42:03 +0530

2ம்பிரதிவாதி செயல்பட்டு வருவதால் 1ம்பிரதிவாதி இவ்வழக்கில் அவசிய கட்சியாக சேர்க்கப்பட்டும், இறந்துபோன சிவநாராயணசாமி ரெட்டியாருக்கு வாதியும், 3ம்பிரதிவாதியும் வாரிசுகள் என்று விளம்புகை செய்யக்கோரியும், வாரிசு சான்றிதழ் வழங்க செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4) 2ம்பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 1ம்பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்—**

இறந்துபோன சிவநாராயணசாமிரெட்டியாருக்கு வாரிசு சான்று வழங்க கோரி தாக்கல் செய்த மனுவின் மீது இந்த பிரதிவாதி சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர் மூலமாக விசாரணை செய்ததில் இரண்டு மனைவிகள் இருப்பதாகவும், வாதி மற்றும் 3ம்பிரதிவாதி தவிர வேறு வாரிசுகள் எவரும் இருக்கிறார்களா என்பது குறித்தும் முழுமையான தகவல்களை வாதி சமர்ப்பிக்காததாலும், வருவாய்த்துறை சுற்றறிக்கையின்படி இறந்துபோன நபருக்கு 2 மனைவிகள் இருப்பின் வாரிசு குறித்த உரிமையை நீதிமன்றம் மூலமாகவே தீர்வு செய்துகொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ள நிலையில் வாதியின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது என்றும், வாதி மற்றும் 3ம்பிரதிவாதி மட்டுமே வாரிசு என்பதை தகுந்த ஆவணங்கள் மூலம் நிரூபிக்க வேண்டும் என்றும், ஆகவே வாதியின் பிராதை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார்.

**5) 3ம்பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம்—**

வாதியின் தாயார் சீதாலட்சுமியும், 3ம்பிரதிவாதியின் தாயார் ராஜாத்தியம்மாளும் உடன்பிறந்த சகோதரிகள் ஆவார்கள். சிவநாராயணசாமி ரெட்டியார் 1952ம் வருடம் சீதாலட்சுமியை திருமணம் செய்து, பின்னர் 1954ம் வருடம் ஐப்பசி மாதம் 19ம் தேதி சீதாலட்சுமியின் சகோதரியான

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY Date: 2026.06.04 14:42:09 +0530

ராஜாத்தியம்மாளை சிவநாராயணசாமி ரெட்டியார் வீட்டில் வைத்து குடும்ப உறுப்பினர்கள் முன்னிலையில் இந்து முறைப்படி திருமணம் செய்து கொண்டார். சிவநாராயணசாமி ரெட்டியாருக்கு சீதாலட்சுமி மூலம் செல்வதுரைச்சியம்மாள், வாதி ஆகிய இரு மக்களும், ராஜாத்தியம்மாள் மூலம் 3ம்பிரதிவாதியும் பிறந்தார்கள். மேற்படி செல்வதுரைச்சியம்மாள் தாய்மாமாவான மாரித்துரை என்பவரை திருமணம் செய்து, அதன் மூலம் ஜெயக்குமார், லலிதா, உமா ஆகியோர் பிறந்தார்கள். செல்வதுரைச்சியம்மாள் 25.09.1993 லும், அவரது கணவர் மாரித்துரை ரெட்டியார் 2019 ம் ஆண்டும் இறந்துவிட்டார்கள். உமா என்பவர் திருமணம் ஆகாமல் 07.06.2001 ல் இறந்துவிட்டார். லலிதா என்பவர் 27.08.2000 ம் தேதி லலித்மோகன் என்ற மகனை மட்டும் வாரிசாக விட்டு விட்டு இறந்துபோய்விட்டார். இந்நிலையில் வாதி தனது உடன்பிறந்த சகோதரியையும், அவரது வாரிசுகளையும் மறைத்து வழக்கு தாக்கல் செய்தும், ராஜாத்தியம்மாளை சிவநாராயணசாமி சேர்த்து வைத்திருந்ததாகவும், அதன் மூலம் 3ம்பிரதிவாதி பிறந்ததாகவும் கூறியுள்ளார். செல்வதுரைச்சியம்மாள் மகனான ஜெயக்குமார் மற்றும் மகள் வழிப்பேரன் லலித்மோகன் ஆகியோர்கள் அவசிய கட்சிக்காரர்கள் என்றும், ஏற்கனவே கோவில்பட்டி வட்டாட்சியர் 28.08.2012 ம் தேதி லேட்.சிவநாராயணசாமிக்கு வாரிசு சான்று வழங்கப்பட்டதில் இறந்துபோன லலிதாவின் மகனை வாரிசாக காட்டவில்லை என்று வாதி கோவில்பட்டி கோட்டாட்சியருக்கு புகார் அனுப்பி ரத்து செய்துவிட்டார். சீதாலட்சுமியின் வாரிசாக அவரது கணவர், வாதி ஆகியோர்களை மட்டும் வாரிசாக காட்டியும், வாதியின் உடன்பிறந்த சகோதரியின் மக்கள் வாரிசுகள் என்பதை மறைத்து வாரிசு சான்று பெற்றுள்ளார். இறந்துபோன சிவநாராயணசாமிருக்கு வாதி, 3ம்பிரதிவாதி மற்றும் ஜெயக்குமார், லலித்மோகன் ஆகியோர்கள் சட்டப்படியான வாரிசுகள் என பிராது சீர்திருத்தம் செய்து பரிகாரம் கோரினால் 3ம்பிரதிவாதிக்கு

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY Date: 2026.06.04 14:42:15 +0530

எவ்வித ஆட்சேபணையும் கிடையாது என்றும், வாதியின் பிராதை தள்ளுபடி செய்ய வேண்டி எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார்.

**6) 4ம்பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கவுண்டர்கிளைம் சுருக்கம்–**

சிவநாராயணசாமி ரெட்டியார் 15.10.2002லும், அவரது மூத்ததார மனைவி சீதாலட்சுமி 27.04.1995லும் இறந்துவிட்டார்கள் என்பதும், சிவநாராயணசாமி ரெட்டியார் – ராஜாத்தியம்மாளின் இல்வாழ்க்கையின் பயனாக 3ம்பிரதிவாதி பிறந்தார் என்பதும் உண்மை. சிவநாராயணசாமி ரெட்டியார் – சீதாலட்சுமி தம்பதியருக்கு 4ம்பிரதிவாதியின் தாயாரான செல்வதுரைச்சியம்மாள், வாதி ஆகிய இருமக்கள் ஆவார்கள். அதில் செல்வதுரைச்சியம்மாள் கடந்த 25.09.1993ல் அவரது கணவரான மாரித்துரை, மக்களான 4ம்பிரதிவாதி, லலிதா, உமா ஆகியோர்களை வாரிசுகளாக வைத்துவிட்டு இறந்துபோய்விட்டார். ஷையார்களில் லலிதா என்பவர் கடந்த 27.08.2000ல் லலித்மோகன் என்ற மகனை வாரிசாக வைத்து விட்டும், பின்னர் உமா என்பவர் திருமணம் ஏதுமின்றி கடந்த 2001ல் இறந்துவிட்டார்கள். இறந்துபோன சிவநாராயணசாமி ரெட்டியாருக்கு வாதி, 3, 4 பிரதிவாதிகள் மற்றும் லலித்மோகன் ஆகியோர்கள் இந்து வாரிசுரிமை சட்டப்படி வாரிசுகள் ஆவார்கள். ஆனால் வாதி அவரது உடன்பிறந்த சகோதரியையும், அவரது வாரிசுகளையும் மறைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளதால், இறந்துபோன சிவநாராயணசாமி ரெட்டியாருக்கு வாதி மற்றும் 3, 4 பிரதிவாதிகள், லலித்மோகன் ஆகியோர்கள் வாரிசுகள் என விளம்புகை பரிகாரம் கோரி எதிர்கோரிக்கை வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

**7) வாதியின் வழக்குரை மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகளின் எதிர்வழக்குரை ஆகியவைகளின் அடிப்படையில் இவ்வழக்கில் கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டது–**

1) இறந்துபோன சிவநாராயணசாமி ரெட்டியாருக்கு வாதி மற்றும் 3ம்பிரதிவாதி மட்டுமே வாரிசுகள் என கோரிய விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY Date: 2026.06.04 14:42:21 +0530

2) வாதி, 2ம்பிரதிவாதிக்கு எதிராக வாரிசு சான்றிதழ் வழங்க கோரிய செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?

3) வாதிக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரம் என்ன?

**8) வாதியின் வழக்குரை மற்றும் 4ம்பிரதிவாதியின் கவுண்டர்கிளைம் ஆகியவைகளின் அடிப்படையில் இவ்வழக்கில் கீழ்க்கண்ட கூடுதல் எழுவினா வனையப்பட்டது–**

1) இறந்துபோன சிவநாராயணசாமி ரெட்டியாருக்கு வாதி, 3, 4 பிரதிவாதிகள், லலித்மோகன் ஆகியோர்கள் வாரிசுகள் என கோரிய விளம்புகை பரிகாரம் 4ம்பிரதிவாதிக்கு கிடைக்கத்தக்கதா?

**9) இவ்வழக்கில்,** வாதி தரப்பு வழக்குரைக்கு ஆதரவாக வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பி.சா.1 குறுக்குவிசாரணையின் போது வா.சா.ஆ.7 முதல் வா.சா.ஆ.12 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.1 குறுக்குவிசாரணையின் போது பி.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. 3ம்பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரைக்கு ஆதரவாக 3ம்பிரதிவாதி பி.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு ஆவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. 4ம்பிரதிவாதி தரப்பு கவுண்டர் கிளைம்–க்கு ஆதரவாக 4ம்பிரதிவாதி பி.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு ஆவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

## நீதிமன்ற பரிசீலனையும், தீர்வுகளும்

**10) 1வது எழுவினா மற்றும் 1வது கூடுதல் எழுவினாக்கான தீர்வு–**

**10(1)** சிவநாராயணசாமி ரெட்டியார் – சீதாலட்சுமியின் மகன் வாதி ஆவார். சிவநாராயணசாமி ரெட்டியார் 15.10.2002லும், சீதாலட்சுமி அம்மாள்

KARUPPASAMY
Digitally signed by KARUPPASAMY
Date: 2026.06.04 14:42:27 +0530

27.04.1995 லும் காலம் சென்றுவிட்டார்கள். சீதாலட்சுமி உயிருடன் இருந்த காலத்திலேயே சிவநாராயணசாமி ரெட்டியார் – ராஜாத்தியம்மாளை சேர்த்து வைத்துக்கொண்டு, அதன் பயனாக 3 ம்பிரதிவாதி பிறந்தார். ராஜாத்தியம்மாள் 29.09.2002 ல் காலம் சென்றுவிட்டார். இறந்துபோன சிவநாராயணசாமி ரெட்டியாருக்கு வாதி மற்றும் 3 ம்பிரதிவாதி வாரிசு நிலைமையில் ஷையாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை ஆண்டு அனுபவம் செய்து வந்து, வாரிசு சான்று கோரி 2 ம்பிரதிவாதி அலுவலகத்தில் 07.08.2019 அன்று மனு தாக்கல் செய்ததில் இறந்துபோன சிவநாராயணசாமி ரெட்டியாருக்கு 2 மனைவிகள் இருப்பதால் நீதிமன்றத்தை அணுகி வாரிசு சான்றிதழ் பெற்றுக்கொள்ளுமாறு 14.09.2019 ம் தேதி அறிவிப்பு செய்துவிட்டதால் வாதியால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**10(2)** 1, 2 பிரதிவாதிகள் தரப்பு எதிர்வழக்குரையில் வாதி வாரிசு சான்று கோரி தாக்கல் செய்த மனுவின் மீது விசாரணை செய்ததில் இறந்துபோன சிவநாராயணசாமி ரெட்டியாருக்கு 2 மனைவிகள் இருப்பதாக தெரிய வந்ததாலும், வாரிசுகளின் முழுமையான தகவல்களை சமர்ப்பிக்காததாலும், வருவாய்த்துறை சுற்றறிக்கையின்படி இறந்துபோன நபருக்கு 2 மனைவிகள் இருப்பதால் நீதிமன்றம் மூலம் தீர்வு செய்துகொள்ள அறிவுறுத்தப்பட்டு வாதியின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. 1, 2 பிரதிவாதிகளுக்கு 80 சி.பி.சி– படி அறிவிப்பு அனுப்பாமல் தாக்கல் செய்த வழக்கு ஏற்புடையதல்ல என்று வாதியின் வழக்கை தள்ளுபடி செய்ய கோரியுள்ளார்.

**10(3)** 3 ம்பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரையில் சிவநாராயணசாமி ரெட்டியார் 1952 ம் வருடம் சீதாலட்சுமி என்பவரை திருமணம் செய்து வாதி மற்றும் செல்வதுரைச்சியம்மாள் பிறந்தார்கள். சிவநாராயணசாமி ரெட்டியார் 1954 ம் வருடம் சீதாலட்சுமியின் உடன்பிறந்த சகோதரியான ராஜாத்தியம்மாளை வீட்டில் வைத்து குடும்ப உறுப்பினர்கள் முன்னிலையில் இந்து முறைப்படி திருமணம் செய்து கொண்டதன் பயனாக 3 ம்பிரதிவாதி பிறந்தார். மேற்படி

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY
Date: 2026.06.04
14:42:33 +0530

செல்வதுரைச்சியம்மாள் கணவரான மாரித்துரை, மக்களான ஜெயக்குமார், லலிதா, உமா ஆகியோர்களை வாரிசுகளாக விட்டு விட்டு 25.09.1993 ல் இறந்துவிட்டார். மேற்படியார்களில் மாரித்துரை 2019 ம் ஆண்டிலும், உமா என்பவர் திருமணம் ஆகாமலே 07.06.2001 லும், லலிதா 27.08.2000 ல் தனது மகனான லலித்மோகனை வாரிசாக விட்டு விட்டு இறந்துபோய்விட்டார். வாதி அவரது உடன்பிறந்த சகோதரியையும், அவரது வாரிசுகளையும் மறைத்து பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், இறந்துபோன சிவநாராயணசாமி ரெட்டியாருக்கு வாதி, 3 ம்பிரதிவாதி, ஜெயக்குமார், லலித்மோகன் ஆகியோர்கள் வாரிசுகள் என்று பிராது சீர்திருத்தம் செய்து பரிகாரம் கோரினால் ஆட்சேபணை இல்லை என்று தாக்கல் செய்துள்ளார்.

**10(4)** 4 ம்பிரதிவாதி தரப்பு கவுண்டர் கிளைமில் சிவநாராயணசாமி ரெட்டியார் – சீதாலட்சுமிக்கு வாதி மற்றும் செல்வதுரைச்சியம்மாள் மக்கள் என்றும், செல்வதுரைச்சியம்மாள் 25.09.1993 ல் கணவரான மாரித்துரை, மக்களான 4 ம்பிரதிவாதி, லலிதா, உமா ஆகியோர்களை வாரிசுகளாக விட்டு விட்டு இறந்துபோய்விட்டார். ஷையார்களில் லலிதா 27.08.2000 ல் லலித்மோகன் என்பவரை வாரிசாக வைத்துவிட்டும், உமா திருமணம் இன்றி 2001 லும் இறந்துபோய்விட்டார்கள். இறந்துபோன சிவநாராயணசாமி ரெட்டியாருக்கு வாதி, 3, 4 பிரதிவாதிகள், லலித்மோகன் ஆகியோர்கள் இந்து வாரிசுரிமை சட்டப்படி வாரிசுகள் என்று எதிர்கோரிக்கை வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

**10(5)** வாதி வா.சா.1 ஆக பிராது சங்கதிகளை சார்ந்து நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து சாட்சியம் அளித்து 15.10.2002 ம் தேதிய சிவநாராயணசாமி ரெட்டியார் இறப்பு சான்றிதழ் வா.சா.ஆ.1 ஆகவும், வாதியின் ஆதார் அட்டை நகல் வா.சா.ஆ.2 ஆகவும், சீதாலட்சுமியின் வாரிசு சான்றிதழ் வா.சா.ஆ.3 ஆகவும், ராஜாத்தியம்மாளின் இறப்பு சான்றிதழ் வா.சா.ஆ.4 ஆகவும், வாரிசு

KARUPPASAMY
Digitally signed by KARUPPASAMY
Date: 2026.06.04 14:42:39 +0530

சான்றிதழ் கோரி மனு செய்த ஒப்புகை சீட்டு வா.சா.ஆ.5 ஆகவும், 2ம்பிரதிவாதி இணையதளத்தில் கொடுக்கப்பட்ட அறிவிப்பு வா.சா.ஆ.6 ஆகவும் தாக்கல் செய்து சாட்சியம் அளித்துள்ளார். வா.சா.1 குறுக்குவிசாரணையில் **"சீதாலட்சுமி, இராஜாத்தியம்மாள் இருவரும் உடன்பிறந்த சகோதரிகள் என்றால் சரிதான். எனது சகோதரி செல்வதுரைச்சி எந்த வருடம் இறந்தார் என்றால் 1993ல் இறந்துபோனார். அவரது கணவர் மாரித்துரை ரெட்டியார் 2019ல் இறந்துபோய்விட்டார் என்றால் சரிதான். மாரித்துரை – செல்வதுரைச்சிக்கு ஜெயகுமார், லலிதா, உமா ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். 3 பேரில் உமா என்பவர் திருமணம் இன்றி இறந்துபோனார் என்றால் சரிதான். லலிதா என்பவர் 2000ம் வருடத்தில் லலித்மோகன் என்பவரை வாரிசாக வைத்துவிட்டு இறந்துவிட்டார் என்றால் சரிதான். இறந்துபோன செல்வதுரைச்சி வாரிசுகளை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். 3ம்பிரதிவாதி எதிர்வழக்குரையில் ஏற்கனவே சிவநாராயணசாமி ரெட்டியாருக்கு 28.08.2012ம் தேதியில் கோவில்பட்டி வட்டாட்சியரால் ப.மு.ஆ.1/4581/2012 என்ற வரிசையில் வாரிசு சான்று வழங்கப்பட்டதை வாதியாகிய நான் கோவில்பட்டி கோட்டாட்சியருக்கு புகார் கொடுத்து ரத்து செய்துவிட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கோட்டாட்சியர் ரத்து செய்து வழங்கிய உத்தரவு பி.சா.ஆ.1 என்றால் சரிதான்"** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**10(6)** 3ம்பிரதிவாதி பி.சா.1 ஆக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து சாட்சியம் அளித்துள்ளார். ஆவணம் குறியீடு செய்யப்படவில்லை. பி.சா.1 குறுக்குவிசாரணையில் **"எனது தகப்பனாரின் முதல் மனைவி பெயர் சீதாலட்சுமியம்மாள் என்றால் சரிதான். முதல் மனைவிக்கு பிறந்தவர்கள் தான் செல்வதுரைச்சியம்மாள், துரைராஜ் (வாதி) வாரிசுகள் என்றால் சரிதான். சீதாலட்சுமியம்மாளை விவகாரத்து எதுவும் செய்யாமல் திருமணம் நடைமுறையில் இருந்தபோதே எனது தாயார் ராஜாத்தியம்மாளை திருமணம்**

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY
Date: 2026.06.04 14:42:54 +0530

**செய்து கொண்டார் என்றால் ஆமாம் பெற்றோர்கள் சம்மதத்துடன் செய்துகொண்டார். பி.சா.ஆ.1 ஆவணத்திற்கு நான் மனு செய்ததன் பேரில் வாதி, எனது பெயர், ஜெயக்குமார் பெயர்களை சேர்த்து வாரிசு சான்று வழங்கினார்கள் என்றால் ஆமாம். பட்டா மாறுதல் உத்தரவு நகல் வா.சா.ஆ.7 ஆகவும், தூத்துக்குடி மாவட்ட வருவாய் அலுவலருக்கு கொடுத்த மனுவின் பேரில் பிறப்பித்த உத்தரவு நகல் வா.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்துள்ளார். வா.சா.ஆ.7, வா.சா.ஆ.8 உத்தரவில் ஜெயக்குமார், சிவநாராயணசாமிரெட்டியாருக்கு நேரிடையான வாரிசு இல்லை என்பதால் பட்டா மாறுதல் உத்தரவை ரத்து செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 3ம்பிரதிவாதி அவரது அம்மாவுக்கு ஏற்படும் பங்கு சொத்திற்காக கட்சி சேர்க்கப்பட்டுள்ளார். 3ம்பிரதிவாதி தனது மனைவிக்கு எழுதிக்கொடுத்த ஏற்பாடு ஆவணம் வா.சா.ஆ.9, வா.சா.ஆ.10 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஜெயக்குமார் அவரது மனைவிக்கு எழுதிக்கொடுத்த ஏற்பாட்டு ஆவணம் வா.சா.ஆ.11, வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஜெயக்குமார் நேரிடையான வாரிசு கிடையாது என கோட்டாட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர் பிறப்பித்த உத்தரவுக்கு விரோதமாக நானும், ஜெயக்குமாரும் மோசடியாக ஆவணங்கள் உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல"** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**10(7)** 4ம்பிரதிவாதி பி.சா.2 ஆக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து சாட்சியம் அளித்துள்ளார். ஆவணம் குறியீடு செய்யப்படவில்லை. பி.சா.2 குறுக்குவிசாரணையில் **"எனது தகப்பனார் பெயர் மாரித்துரை என்றால் சரிதான். எனது தாயார் பெயர் செல்வதுரைச்சியம்மாள் என்றால் சரிதான். வாதியும், எனது தாயாரும் உடன்பிறந்தவர்கள் என்றால் சரிதான். எனது தாத்தா பெயர் சிவநாராயணசாமி ரெட்டியார் என்றால் சரிதான். அவரின் முதல் மனைவியின் பெயர் சீதாலட்சுமியம்மாள் என்றால் சரிதான். முதல்மனைவிக்கு பிறந்தவர்கள் தான் எனது தாயாரும், வாதியும் என்றால் சரிதான். 2வது மனைவி பெயர்**

KARUPPASAMY
Digitally signed by KARUPPASAMY
Date: 2026.06.04 14:43:01 +0530

**ராஜாத்தியம்மாள் என்றால் சரிதான். ராஜாத்தியம்மாளுக்கு பிறந்தவர் தான் 3ம்பிரதிவாதி என்றால் என்றால் சரிதான். என் உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர்கள் என்றால் லலிதா, உமா மகேஸ்வரி. அதில் உமாமகேஸ்வரி திருமணம் ஆகாமலே இறந்துவிட்டார் என்றால் சரிதான். லலிதா உயிருடன் இருக்கிறாரா என்றால் இறந்துவிட்டார். லலிதாவுக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் ஒரே மகன் தான் லலித்மோகன். நான் சிவநாராயணசாமி ரெட்டியாருக்கு நேரிடையான வாரிசு கிடையாது என்றும், மகள் வழி வாரிசு என்று சொன்னால் சரிதான் எனது தாயார் இறந்த பின்னர் நான் தான் வாரிசு. லலித்மோகன் எனது சகோதரியின் மகன் என்றால் சரிதான். சிவநாராயணசாமி ரெட்டியாருக்கு லலித்மோகன் மகள் வழி கொள்ளுப்பேரன் என்றால் சரிதான்"** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**10(8)** இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டது. சாட்சி மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. சிவநாராயணசாமி ரெட்டியாரின் முதல் மனைவி சீதாலட்சுமி என்பதும், சீதாலட்சுமி உயிருடன் இருந்த காலத்திலேயே சிவநாராயணசாமி ரெட்டியார் ராஜாத்தியம்மாளை திருமணம் செய்து கொண்டார் என்பதும், சீதாலட்சுமி மற்றும் ராஜாத்தியம்மாள் உடன்பிறந்த சகோதரிகள் என்பதும், ராஜாத்தியம்மாளின் மகன் 3ம்பிரதிவாதி என்பதும், சீதாலட்சுமியின் மக்கள் வாதி மற்றும் செல்வத்துரைச்சியம்மாள் என்பதும், சிவநாராயணசாமி ரெட்டியார் 15.10.2002 லும், சீதாலட்சுமி அம்மாள் 27.04.1995 லும், ராஜாத்தியம்மாள் 29.09.2002 லும் காலம் சென்றுவிட்டார்கள் என்பதும் இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளாகும். வா.சா.ஆ.3 ஆவணத்தில் இறந்துபோன சீதாலட்சுமிக்கு வாரிசுகளாக சிவநாராயணசாமி, துரைராஜ் பெயர் மட்டும் குறிப்பிட்டு வாரிசு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. இறந்துபோன சீதாலட்சுமியின் மகளான செல்வதுரைச்சி பெயர் குறிப்பிடப்படவில்லை. வாதியின் சகோதரி செல்வத்துரைச்சி 1993ல் இறந்துபோனார் என்பதும்,

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY
Date: 2026.06.04 14:43:07 +0530

செல்வத்துரைச்சி – மாரித்துரைக்கு ஜெயகுமார், லலிதா, உமா ஆகியோர்கள் வாரிசுகள் என்பதையும், அதில் லலிதா 2000ம் வருடத்தில் லலித்மோகனை வாரிசாக விட்டு விட்டு இறந்துவிட்டார் என்பதும், உமா திருமணம் இன்றி இறந்துபோனார் என்பதையும் வா.சா.1 குறுக்குவிசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளார். சிவநாராயணசாமி ரெட்டியார் இறப்பதற்கு முன்பே முதல் மனைவியின் மகளான செல்வதுரைச்சியம்மாள் 25.09.1993ல் 4ம்பிரதிவாதி, லலிதா, உமா ஆகியோர்களை விட்டு விட்டு இறந்து போய்விட்டார் என்பதும், செல்வதுரைச்சியம்மாளின் மகளான லலிதா என்பவர் 27.08.2000ல் லலித்மோகன் என்பவரை வாரிசாக விட்டு விட்டு காலம் சென்றுள்ளார் என்பதும், உமா என்பவர் திருமணம் இன்றி இறந்துபோனார் என்பதும் சாட்சியங்கள் மூலம் தெரிய வருகிறது. இந்து வாரிசுரிமை சட்டம்

**CLASS I**

**Son;** daughter; widow; mother; son of a pre-deceased son; daughter of a pre-deceased son; **son of a pre-deceased daughter**; daughter of a pre-deceased daughter; widow of a pre-deceased son; son of a pre-deceased son of a pre-deceased son; daughter of a pre-deceased son of a pre-deceased son; widow of a pre-deceased son of a pre-deceased son 1[**son of a predeceased daughter of a pre-deceased daughter;** daughter of a pre-deceased daughter of a pre-deceased daughter; daughter of a pre-deceased son of a pre-deceased daughter; daughter of a pre-deceased daughter of a pre-deceased son].

**10(9)** மேலே குறிப்பிட்டுள்ள இந்து வாரிசுரிமை சட்டம் வகை Iன் படி இறந்துபோன சிவநாராயணசாமி ரெட்டியாருக்கு வாதி மற்றும் 3ம்பிரதிவாதி மகன் **(Son)** என்ற அடிப்படையிலும், 4ம்பிரதிவாதி முன்னரே இறந்துபோன மகளின் மகன் **(son of a pre-deceased daughter)** என்ற அடிப்படையிலும், லலித்மோகன் என்பவர் முன்னரே இறந்த மகளின் முன்னரே இறந்த மகளின்

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY Date: 2026.06.04 14:43:14 +0530

மகன் (son of a predeceased daughter of a pre-deceased daughter) என்ற அடிப்படையிலும் வாரிசுகள் ஆவார்கள். இறந்துபோன சிவநாராயணசாமி ரெட்டியாருக்கு வாதி, 3, 4 பிரதிவாதிகள், லலித்மோகன் ஆகியோர்கள் வாரிசுகள் என்பது வகை Iல் குறிப்பிடப்பட்டுள்ளதன் மூலம் தெரிய வருவதாலும், சாட்சி மற்றும் சான்றாவணங்கள் மூலம் வாரிசுகள் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளதால் 4ம்பிரதிவாதி எதிர்கோரிக்கையில் இறந்துபோன சிவநாராயணசாமி ரெட்டியாருக்கு வாதி, 3, 4 பிரதிவாதிகள் மற்றும் லலித்மோகன் ஆகியோர்கள் வாரிசுகள் என்று கோரியுள்ள விளம்புகை பரிகாரம் 4ம்பிரதிவாதிக்கு கிடைக்கத்தக்கது என்று 1வது கூடுதல் எழுவினாவிற்கு தீர்வு காணப்படுகிறது. இறந்துபோன சிவநாராயணசாமி ரெட்டியாருக்கு முன்னரே இறந்துபோன முதல்மனைவியின் மகளும், வாதியின் உடன்பிறந்த சகோதரியுமான செல்வத்துரைச்சியம்மாளின் வாரிசுகள் இறந்துபோன சிவநாராயணசாமி ரெட்டியாருக்கு வாரிசுகளாக உள்ள நிலையில் அவர்களை வழக்கில் கட்சி சேர்க்காமல் இறந்துபோன சிவநாராயணசாமி ரெட்டியாருக்கு வாதி, 3ம்பிரதிவாதி மட்டும் வாரிசு என்று கோரிய விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று 1வது எழுவினாவிற்கு தீர்வு காணப்படுகிறது.

**11) 2வது எழுவினாக்கான தீர்வு–**

இறந்துபோன சிவநாராயணசாமி ரெட்டியாருக்கு வாதி, 3ம்பிரதிவாதி மட்டும் வாரிசு என்று கோரிய விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று 1வது எழுவினாவிற்கு தீர்வு காணப்பட்டுள்ள நிலையில், அதன் அடிப்படையில் இறந்துபோன சிவநாராயணசாமி ரெட்டியாருக்கு வாரிசு சான்றிதழ் வழங்க வேண்டி 2ம்பிரதிவாதிக்கு எதிராக கோரிய செயலுறுத்துக்கட்டளை பரிகாரமும் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று 2வது எழுவினாவிற்கு தீர்வு காணப்படுகிறது.

KARUPPASAMY
Digitally signed by KARUPPASAMY
Date: 2026.06.04 14:43:20 +0530

**<u>12) 3 வது எழுவினாக்கான தீர்வு–</u>**

1, 2 எழுவினாக்கள் வாதிக்கு எதிராக தீர்வு காணப்பட்டுள்ள நிலையில் வேறு எந்த பரிகாரமும் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று 3 வது எழுவினாவிற்கு தீர்வு காணப்படுகிறது.

**13) இறுதியாக,** (i) வாதியின் வழக்கு தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

(ii) இறந்துபோன சிவநாராயணசாமி ரெட்டியாருக்கு வாதி, 3, 4 பிரதிவாதிகள் மற்றும் லலித்மோகன் ஆகியோர்கள் வாரிசுகள் என விளம்புகை செய்து 4 ம்பிரதிவாதியின் எதிர்கோரிக்கை வழக்கு அனுமதித்து தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் எழுதி விரிவாக்கம் செய்து கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 04.06.2026 இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY Date: 2026.06.04 14:43:29 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி.

**<u>வாதி தரப்பு சாட்சி –</u>**

வா.சா.1 – துரைராஜ்

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள் –</u>**

| | |
|---|---|
| வா.சா.ஆ.1 | 15.10.2002 ம் தேதியில் இறந்த சிவநாராயணசாமி ரெட்டியாரின் இறப்பு சான்றிதழ் |
| வா.சா.ஆ.2 | வாதியின் ஆதார் அடையாள அட்டை நகல் |
| வா.சா.ஆ.3 | சீதாலட்சுமியின் இறப்பின் பேரில் வழங்கப்பட்ட வாரிசு சான்றிதழ் |
| வா.சா.ஆ.4 | 29.09.2002 ம் தேதியில் இறந்த ராஜாத்தியம்மாளின் இறப்பு சான்றிதழ் |

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY Date: 2026.06.04 14:43:34 +0530

| | |
|---|---|
| வா.சா.ஆ.5 | 07.08.2019ம் தேதியில் வாதி, 2ம்பிரதிவாதிக்கு வாரிசு சான்றிதழ் கோரி மனு செய்த ஒப்புகை சீட்டு |
| வா.சா.ஆ.6 | 14.09.2019ம் தேதியில் மனுவிற்கு 2ம்பிரதிவாதி அலுவலக இணையத்தில் கொடுக்கப்பட்ட அறிவிப்பு |
| வா.சா.ஆ.7 | 14.11.2016ம் தேதியில் கோவில்பட்டி கோட்டாட்சியர் பிறப்பித்த உத்தரவு |
| வா.சா.ஆ.8 | தூத்துக்குடி மாவட்ட வருவாய் அலுவலர் கடந்த 06.09.2018ம் தேதியில் பிறப்பித்த உத்தரவு |
| வா.சா.ஆ.9 | 23.06.2014ம் தேதியில் முருகேசன் என்பவர் ஷையாரின் மனைவி ஆஷா என்பவருக்கு எழுதிக்கொடுத்த ஏற்பாடு ஆவணம் எண்.2517/2014 சப்ரி நகல் |
| வா.சா.ஆ.10 | 23.06.2014ம் தேதியில் முருகேசன் என்பவர் ஷையாரின் மனைவி ஆஷா என்பவருக்கு எழுதிக்கொடுத்த ஏற்பாடு ஆவணம் எண்.2516/2014 சப்ரி நகல் |
| வா.சா.ஆ.11 | 23.06.2014ம் தேதியில் ஜெயக்குமார் என்பவர் ஷையாரின் மனைவி சகுந்தலா என்பவருக்கு எழுதிக்கொடுத்த ஏற்பாடு ஆவணம் எண்.2515/2014 சப்ரி நகல் |
| வா.சா.ஆ.12 | 23.06.2014ம் தேதியில் ஜெயக்குமார் என்பவர் ஷையாரின் மனைவி சகுந்தலா என்பவருக்கு எழுதிக்கொடுத்த ஏற்பாடு ஆவணம் எண்.2514/2014 சப்ரி நகல் |

<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்–</u>

பி.சா.1 – முருகேசன்

பி.சா.2 – ஜெயகுமார்

<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணம் –</u>

| | |
|---|---|
| பி.சா.ஆ.1 | நகல் ஆ 6/9671/13ன்படி வாரிசு சான்று நிராகரிக்கப்பட்டதற்கான ஒளிநகல் |

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY
Date: 2026.06.04 14:43:42 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
கோவில்பட்டி,
அ.வ.எண்.170/2019
[CNR No.TNTT06-000211-2019]
வரைவு/நேரிய/தீர்ப்புரை
நாள்-04.06.2026